DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.106/2024 | Deposition of Witness for : PW2 |
| Name : ரமேஷ் குமார் | Father/Husband Name : சின்னதுரை |
| Age : 36 | Village : அம்மன்புரம் |
| Taluk : திருச்செந்தூர் | Calling : கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27 January 2026.
Accused absent. Petition U/s.355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது அம்மன்புரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி டீக்கடையை மூட வேண்டும் என்று சொல்லி தொடர்ந்து பிரச்சனை செய்து வந்தார். எதிரி மது அருந்துவிட்டு மது பாட்டில்களை தூக்கி எங்களது கடையின் முன்பு வீசி எனது அப்பா கடையில் தூங்கி கொண்டிருக்கும் நேரங்களில் பிரச்சனை செய்து வந்தார். 31.12.2023 அன்று மாலை 6 மணியளவில் அம்மன்புரம் பஸ் ஸ்டாண்டில் வைத்து, நானும் எனது அம்மாவும் நின்று கொண்டிருந்த வேளையில் அந்த இடத்திற்கு மது அருந்துவிட்டு வந்த முருகானந்தம் என்பவர் புண்டா மவனே, தேவடியா மவனே என்று என்னையும் எனது அம்மாவையும் பார்த்து ஆபாசமாக பேசினார். பின்பு கருக்கு மட்டையால் என்னை பின் முதுகில் அடித்தார், அடித்துவிட்டு என்னையும் எனது அம்மாவையும் பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார். என் அம்மா வந்து சம்பவத்தை தடுக்க வந்தபோது அம்மாவின் இடது கை பெருவிரலின் நடுவில் கருக்கு மட்டையால் தாக்கினார் அதில் அவருக்கு வெட்டுக்காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது, நிற்கவில்லை. பின்பு எனக்கு தெரிந்த சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்த நபர்கள் 108 க்கு தகவல் தெரிவித்து திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு நானும் எனது அம்மாவும் சிகிச்சைக்காக சென்றோம். பின்பு அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

2. எதிரிக்கும் எனக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல, அவர் என்னுடைய அப்பாவினுடைய அக்காவின் பையன் ஆனால் தூரத்து உறவினர் ஆவார். நான் தேனியில் தங்கியிருந்து தேங்காய் பறிக்கும் வியாபாரம் செய்து வந்தேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருந்தபோது மெஞ்ஞானபுரம் காவல்துறையினர் என்றைய தினம் வாக்குமூலம் வாங்க வந்தார்கள் என்றால் சம்பவ நடத்ததற்கு மறுநாள் இரவு என்னிடம் வாக்குமூலம் வாங்க வந்தார்கள். எதிரியின் வலது கையில் காயம் ஏற்பட்டதாக நான் புகார் மனுவில் கூறியுள்ளேனா என்றால் இல்லை, எனது கையில் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளேன். எதிரிக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லும் பிரச்சனையில் என் மீது காவல்துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளார்களா என்றால் இல்லை. நான் தேங்காய் பறிக்கும் போது ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி பொய்யாக வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல (சாட்சி அவரது உடைந்த வலது கை சுண்டுவிரலை காட்டினார்).

3. எதிரியை நான் அடித்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எனக்கு வேறு


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.01.27 16:24:16 +0530

எங்கோ பட்ட காயத்தை வைத்து எனக்கும் எனது அம்மாவிற்கும் காயம் ஏற்பட்டதாக நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை ஆபாசமாக பேசவோ, திட்டவோ இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

4. நான் அளித்துள்ள அ.சா.ஆ.1 ஆவணத்தை படித்துப் பார்த்து கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார் மனுவை போலீசார் என்னிடம் படித்துக் காட்டவில்லை என்றால் சரியல்ல. புகார் மனுவில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். எனது தாயாருக்கு அடிபட்டதாக நான் கூறும்பட்சத்தில் அதற்காக அவருக்கு X–ray, Scan ஏதாவது எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது. X–ray, Scan report ஆகியவற்றை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் காவல்நிலையத்தில் கொடுத்துள்ளேன்.

5. எனது ஊரின் அருகே ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது என்றால் சரியல்ல, உடன்குடிக்கு செல்ல வேண்டும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பட்சத்தில் சத்தம் கேட்டுத்தான் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரியல்ல, நான் பஸ் ஸ்டாண்டில் நிற்கும்போது எதிரி வந்து பிரச்சனை செய்தார். எனக்கும் எதிரிக்கும் தான் பிரச்சனை என்றால் எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் எதிரிக்கும் பிரச்சனை உள்ளது. அ.சா.1 இந்த சம்பவத்தை பார்த்து விலக்கிவிட வந்தபோது தான் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான், அவருக்கு ஏற்பட்ட காயத்தில் அவரது நரம்பு வெட்டப்பட்டுவிட்டது. இரு தரப்பினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. என்னுடைய கடையில் இருந்து எனது வீட்டுக்கு எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 300 மீட்டர் தொலைவு இருக்கும். எதிரியின் வீட்டிற்கு முன்பு தான் என்னுடைய கடை உள்ளது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V — Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.01.27 16:24:29 +0530

Judicial Magistrate, Sathankulam.